
## III. வேதவினா குறுக்கெழுத்துப் போட்டி - 98

**யாத்திராகமம் 1 - 40 (எண்ணிக்கைகள்)**



Book - Post

பெறுநர் : திரு/திருமதி

↓↓↓

1. கோத்திரப் பிதாக்களின் நாமங்களின்படியே கோமேதகக் கற்களில் பொருத்திய பத்மராகம், புஷ்பராகம், மாணிக்கம் மார்பதகக்கத்தில் இடம் பெற்ற வரிசை (7)
10. குத்து விளக்கிலிருந்த பொற்கிளைகள் எத்தனை? (2)

→→→

1. கூடராமாம் கூடராம் ஆசரிப்புக் கூடாரம். ஆண்டவர் அதனை ஸ்தானபம் பண்ண ஆணையிட்ட நாள். அது எது?. (12) கடைசி மூன்று எழுத்துக்கள் ↓
2. பலிபீடத்தில் ஏகமாய் செய்யப்பட்ட கொம்புகள் எத்தனை? (2)
3. ................. நாளோ உங்களுக்குப் பரிசுத்த நாள் (3)
5. ஒரு சேக்கல்லுக்கு .................... கேரா (2) எண்ணால் எழுதுக.
6. பரிசுத்த ஸ்தலத்து மூடுதிரைகளின் எண்ணிக்கை எத்தனை? (3)
11. வாசஸ்தலத்தின் மேல் கூடாரமாய் போடப்பட்ட மூடுதிரைகளின் நீளம் ............ முழம். (4) கடைசி எழுத்து ↓
12. பிரகாரத்தின் நீள, அகலம் எத்தனை முழங்கள்? (2, 4)

↑↑↑

7. வாசஸ்தலத்திற்கு நிறுவப்பட்ட சீத்திம் பலகைகளின் நீளம் முழம். (3)
9. பரிசுத்த தூபவர்க்கத்தில் சேர்க்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை (1) எண்ணால் எழுதுக.
13. சதுரமாய் அமைந்த தகன பலி பீடத்தின் பக்க அளவு யாது? (6)
15. அழகிய மகவை எவரும் அறியா வண்ணம் ஒளித்து வைத்த காலம். (6)
18. கிருபாசனத்தின் நீளம் .................. முழம். (5)

←←←

4. மோசே இரத்தத்தில் ....................... எடுத்து பாத்திரங்களில் வார்த்தான். (2)
8. வெளிப் பிரகாரத்தின் நான்கு பக்கங்களிலும் நிறுவப்பட்ட தூண்கள் எத்தனை? (4).
14. பரிசுத்த ஸ்தலத்து மூடுதிரையின் நீளம் ................ முழம். (7)
16. சமுகத்தப்ப மேஜையின் உயரம் ........... முழம். (4)
17. வாசஸ்தலத்தின் மேல் கூடாரமாய் ...................... மூடுதிரைகள் போடப்பட்டன. (4)
18. எகிப்திலிருந்து ஜனங்கள் புறப்பட்ட .................. ................. கூடாரம் நிறுவப்பட்டது. (9)



SSA
# ஆரோனின் துளிர்த்த கோல்
வேதம் அறிவோம், தேவர்களாவோம்
THE SPROUTED STAFF OF AARON
மாத இதழ் : செப்டம்பர் 2020

## யாத்திராகமம் 20 : 2

**என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.**

## John 13 : 14, 15

Having earned a doctorate from the London School of Economics, one gentleman of high class society of India, approached Gandhiji's ashram to seek guidance about his future. Everybody at the ashram was given some specific assignment, and this man was to clean the toilets. Deeply offended he went to Gandhiji immediately and complained "I hold a doctorate. I am capable of doing great things. Why do you waste my time and talents on cleaning toilets?" Gandhiji responded, "I know of your capacity to do great things, but I have yet to discover your capacity to do little things."

We may be highly qualified to serve our Lord Jesus in a signficant way; because of our talents, training and gifts, we may have the potential to carry on great and effective spiritual service. But are we willing to humbly perform some menial task if He so assigns? Would we be willing to wash another's feet, as Jesus did?

**அன்புடையீர், வணக்கம்.**

# அக அலங்காரத்தின் புற வெளிப்பாடு

முழங்காற்படியிடுவதும் முக்காடு போடுவதும் அரிதாகிவிட்ட காலத்தில் வாழ்கிறோம். என் முழங்கால்கள் எதைக் கொண்டு வந்திருக்கிறது என்று என்றாவது நாம் எண்ணியது உண்டா? தானியேல் மேல் அறை வீட்டில் முழங்காற்படியிட்டு ஜெபித்ததாக சிறு வயதிலிருந்தே ஞாயிறு பள்ளியில் கேள்விப்பட்டிருந்தாலும் ஒரு சிலரே முழங்கால்கள் முடக்குவதினால் வரும் ஆசீர்வாதங்களை அனுபவித்திருக்கிறார்கள். இந்த இக்கட்டான வேளையில் முழங்காற்படியிடுவது மிக மிக அவசியம் என்பதை விசுவாசிகள் உணரவேண்டும்.

சாலொமோன் ராஜா இஸ்ரவேல் சபையார் எல்லாருக்கும் எதிராக முழங்காற்படியிட்டு, தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து ஆலயப் பிரதிஷ்டையின்போது குடிமக்களின் குறைகளைக் கூறி ஒவ்வொன்றுக்கும் வானாதி வானவரின் இரக்கத்திற்கும், மன்னிப்பிற்கும் மன்றாடுவதைப் பார்க்கிறோம். இதில் தேசத்தில் ஏற்படும் பஞ்சம், கொள்ளை நோய், வறட்சி, சாவி, வெட்டுக்கிளி, பச்சைக்கிளி, சத்துருக்களின் முற்றுகை என்று தற்போது நாம் இந்திய தேசத்தில் அனுபவிக்கும் அனைத்துமே குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து நம்முடைய முழங்கால்களை முடக்குவது எவ்வளவு அவசியமாயிருக்கிறது என்பதை நாம் உணரலாம். அசட்டையாக இருப்பதற்கு அவகாசமில்லை.

எலியா தீர்க்கதரிசி கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின்மேல் ஏறி, தரையிலே பணிந்து, தன் முகம் தன் முழங்காலில்பட குனிந்து வேண்டுதல் செய்தார். வானம் மேகங்களினாலும், காற்றினாலும் கறுத்து பெருமழை உண்டாயிற்று. அக அலங்காரமாகிய தாழ்மையை புற வெளிப்பாடாக வெளிப்படுத்தும் சின்னமே முழங்காற்படியிடுதல். இந்த அழகிய அலங்காரம் ஆண்டவரின் பார்வைக்கு அருமையானது. முழங்கால்களை முடக்கும் தேவ பிள்ளைகளுக்கு தேவன் இயற்கையின் மேலும் அதிகாரத்தை கொடுக்கிறதைப் பார்க்கிறோம்.

எஸ்றா என்னும் வேதபாரகன் கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும், நீதி நியாயங்களையும் உபதேசிக்கவும், தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான். இஸ்ரவேல் தேசம் தீட்டுப்பட்டிருந்தது. தேவன் லேவி கோத்திரத்தைப் ஆசாரிய ஊழியத்திற்கென்று பிரித்தெடுத்து பரிசுத்தமாக வாழ கட்டளையிட்டார். ஆனால் அவர்களோ அந்நிய பெண்கள் மீது மோகம் கொண்டு அவர்களை மனைவிகளாக ஏற்றுக் கொண்டு பரிசுத்த வித்தை பரிசுத்த குலச்சலாக்கினார்கள். இதை அறிந்த எஸ்றா பதபதைக்கிறார், திகைக்கிறார். அந்திப்பலி நேரத்திலே எஸ்றா துக்கத்தோடே எழுந்து, கிழித்துக் கொண்ட வஸ்திரத்தோடும், சால்வையோடும் முழங்காற்படியிட்டு தன் கைகளை தன் தேவனாகிய கர்த்தருக்கு நேராக விரித்து பாவ அறிக்கைச் செய்கிறார். அதின் விளைவாக நம்பிக்கை உண்டு என்ற எண்ணம் மக்களுக்குத் துளிர்க்கிறது. இஸ்ரவேல் தேசம் சுத்திகரிக்கப்படைந்தது. நம் தேசத்திலிருக்கும் விக்கிரக ஆராதனைகளும், வேசித்தனங்களும், விபச்சாரங்களும் முற்றிலும் அழிய வேண்டும் என்றால் விசுவாசிகளாகிய நாம் நம்முடைய முழங்கால்களை முடக்குவது எவ்வளவு அவசியமாயிருக்கிறது. விக்கிரங்கள் கட்டோடே ஒழிந்துபோம் என்று தேவன் நமக்கு வாக்கு கொடுத்திருக்கிறார். தேவன் செயல்பட விசுவாசிகள் முழங்கால்களை முடக்குதவதை அவர் எதிர்ப்பார்க்கிறார்.நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்; அசதியாயிருக்கிறோமா? தம்மை நாமே ஆராய்ந்து பார்த்து துரிதமாய் முழங்கால்களை முடக்கி ஆண்டவரின் சமுகத்தில் காத்திருப்பது அவசியம். சர்வ பூமிக்கும் தேவனின் அனுமதியில்லாமல் ஒரு அணுக்கூட அசைவதில்லை. இனியும் காரியத்தின் தீவிரத்தையும் தேவனுடைய உக்கிர கோபத்தின் காரணத்தையும் உணராவிட்டால் நமக்கு ஐயோ! தேவ ஜனமே நாம் விழித்திப்போம். நாசியில் சுவாசமுள்ள மனிதர்களை நம்புவதை விட்டுவிடுவோம். நீண்ட ஆயுசுள்ளவரும், வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறவருக்கு முன்பாக நடுநடுங்கி நம்முடைய முழங்கால்களை முடக்குவோம். ஆமென்.

திருமதி. **எஸ்தர் இராபின்சன்,** சென்னை



**<u>கடந்த மாத வேதவினா குறுக்கெழுத்து போட்டியில் கலந்து கொண்டவர்கள் செல்வி / செல்வன்/ திருமதி / திருவாளர்.</u>**

**I. 1. பிரியா ஜெனிட்டா, 2. ஹெப்சி பானுமதி II. 1. மோனிஷா**

**II & III. 1. ரூத் வயலட் வசந்தா, 2. ஃபான்சி, 3. A.V. வர்ஜீனியா, 4. Dr. விஜயலலிதா, 5. சாந்தி குணா, 6. சந்திரா சிம்சன், 7. சுதந்திரதேவி, 8. பத்மாவதி ஞானப்பிரகாசம், 9. பெபல் ஜீவகி தாமஸ், 10. ஏஞ்சலினா, 11. வசந்தா செல்வராஜ், 12. சுகந்தி ஜோன்ஸ், 13. ஜாய்ஸ் மணிமொழி, 14. G.T. ஜூலி, 15. மத்தேயுமாற்கு, 16. S. தனபாக்கியம், 17. I.டெய்சி, 18. ஜாய்ஸ் சுசீலா தேவி, 19. ஜான் அரசி, 20. பியூலா ஜெயபிரகாஷ்**

**III. 1. மாலா கிறிஸ்டி நெப்போலியன், 2. மியூரியல் ராபர்ட், 3. ஹேமலதா, 4. சித்ராபாபு, 5. சின்னம்மாள் மேரி, 6. ஏஞ்சலின் பியூலா, 7. ரூபி சகுந்தலா, 8. ஹேமலதா ஜெயசந்தர், 9. M. எலிசபெத்ராணி, 10. M. பத்மாவதி, 11. ஷீலா ஜான்சன்**

**I, II & III. 1. ரூபல்லா அற்புதராஜ், 2. ஜாய் ஜோசப், 3. பிரேமா வில்சன், 4. ரெஜினாமேரி மனோகரன், 5. பாக்கியராணி, 6. மனோகரி பெஞ்சமின், 7. சூசன் சுமித்ரா, 8. கிரேஸ் பிராங்கிளின், 9. பாலின் மார்டீன், 10. பீட்டர் தாமஸ், 11. D. அன்பு கமலம், 12. மோனிகாள் காந்திநாத், 13. ஜூலியா சார்லி, 14. ஜெபசீலி ஜெயக்கொடி, 15. M. எலிசபெத், 16. மல்லிகா எட்வின், 17. ரீட்டா ரோசலிண்ட், 18. ஐவி கலாவதி, 19. விமலா ரோசபெல், 20. மார்கிரேட் எலிசபெத், 21. லலிதா ஜாக்சன், 22. ஜேனட் குணா, 23. ஆனி கில்சன், 24. ராணி சாந்தகுமார், 25. சாந்தி ஜோயல், 26. ரோசலின் திலகவதி, 27. சந்திரா இம்மானுவேல், 28. ஷாலினி இம்மானுவேல், 29. ஜெயசீலி பால்ராஜ், 30. ராணி தனராஜ், 31. ரபேக்கா ஐசக், 32. பிரேமலதா தியாகராஜன், 33. ஜோசப் அதிசயம், 34. திலகவதி அதிசயம், 35. மீரா பாண்டியன், 36. கமலா பாய், 37. சலோமி எட்வின், 38. ஒலிவியா லாங்டன், 39. J. மிராண்டா, 40. தேவகிருபா, 41. ஜெயசீலி ரவிச்சந்திரன்.**

பரிசு பெறுபவர்: திருமதி. **ரூபல்லா அற்புதராஜ்** திண்டுக்கல்

## II. வேதாகமப் புதிர் - 41 விடை

**என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும். யாத்.33 : l4**

## III. வேதவினா குறுக்கெழுத்துப் போட்டி - 97 பதில்

**யாத்திராகமம் l - 40 (கதாபாத்திரங்கள்)**

→
1. பார்வோனுடைய குமாரத்தி 2:5
2. மிரியாம் 15:20, 21
4. யோசேப்பு 13:19
8. ஊரி 31:2
12. எல்கானா 6:24
17. எத்திரோ 3:1

←
3. அம்ராம் 6:20
5. மோசே 2:10

←
6. ஆசீர் 6:24
14. மூசி 6:19
15. தாண் 38:23
16. யூதா 35:30
18. சிப்போராள் 4:25

↓
3. அமலேக்கியன் 17:16
6. ஆசேர் 1:3
7. சவுல் 6:15

↓
8. ஊசியேல் 6:18
11. அபியூ 6:23

↑
9. கோகாத் 6:18
10. மெராரி 4:19
12. எலிசபாள் 6;23
13. யாக்கோபு 1:4
17. எமுவேல் 6:15
18. சிப்பிராள் 1:5

# II. வேதாகமப் புதிர் - 42

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மே | ம | வா | ச | ஸ் | த | ல | த் | தை | பெ |
| க | ல் | ணி | ர் | நா | ன் | பூ | ப | க் | ய் |
| ம் | ப் | த | யு | ன | வு | பொ | கா | ரு | யா |
| ச | து | ர | மு | ம் | லு | றி | ற் | சு | லை |
| த் | த | க் | து | க | ளு | ம் | க | சு | வே |
| நா | லு | ந் | வா | ஷே | ள் | க | ண் | தூ | பு |
| கு | ல | யை | ர | பி | த் | சை | ண் | த | ப் |
| தா | டி | ரி | மு | அ | ரு | கே | ச் | பூ | டி |
| மூ | ன் | றா | ம் | யு | ளை | க | ல் | க | அ |

**யாத்திராகமம் 37–40 அதிகாரங்கள்**

1. இவ்வேத பகுதியில் உள்ள 22 வார்த்தைகள் குறுக்கும் நெடுக்குமாக, வல இடமாக, மேலும் கீழுமாக இடம் பெற்றிருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்து வசன இருப்பிடம் எழுதி வரிசைப்படுத்தவும்.

2. சிதறியுள்ள 14 எழுத்துக்களை ஒழுங்குப்படுத்தினால் பரிசுத்த கிரீடத்தில் இருந்த முத்திரை வெட்டான வாசகம் வெளிப்படும்.

## வேதாகமப் போட்டி : SSA - 20 அறிவிப்பு

அன்புடையீர், வணக்கம்.

நிலவிவரும் அசாதாரண சூழலில் ஆண்டுதோறும் நடைபெறும் வேதாகமப் போட்டி இந்த ஆண்டு இணையதளத்தின் மூலம் நடைபெறும்.

நாள் : **08.11.2020 ஞாயிறு**
நேரம் : பிற்பகல் **3.00** மணி முதல் மாலை **5.00** மணி வரை (2 மணி நேரம்)

வேதப் பகுதி : **யாத்திராகமம், பிலிப்பியர்**
கேள்வி வகை : **பதிலைத் தெரிவு செய்தல்**
கேள்வி எண்ணிக்கை : **100**

| வயது | பரிசு விபரம் I | II | III | பிறபரிசுகள் |
|---|---|---|---|---|
| < 40 | ரூ. 5000 | ரூ. 3000 | ரூ. 1000 | பல ஊக்கப் பரிசுகளும் ஆறுதல் பரிசுகளும் உண்டு. |
| 40 - 60 | ரூ. 5000 | ரூ. 3000 | ரூ. 1000 | |
| > 60 | ரூ. 5000 | ரூ. 3000 | ரூ. 1000 | |

அனைவரும் கலந்து கொண்டு வேதத்தில் தேறினவர்களாக இருக்க அழைக்கப்படுகிறீர்கள்.

தொடர்புக்கு : **97914 09192, 97894 32314**





### தேவனது அதிசய மீட்பு தொடர்கிறது...

தலைப்பிள்ளை சங்காரம் என்ற 10-ம் வாதையைத் துவங்கும் முதல்நாள் இரவு கர்த்தர் பஸ்காவை அனுசரிக்கும்படி மோசேக்கு விவரித்த காரியங்களை இஸ்ரவேலர்கள் கடைபிடிக்கின்றனர். பஸ்கா மற்றும் அதனைத் தொடர்ந்து புளிப்பில்லா அப்பப்பண்டிகைகளைப் பற்றிய நியமங்கள், அதன் கருத்துகள், அதனால் நாம் பெறும் வெளிப்பாடுகள், பிற்காலத்திற்கான நிழலாட்டமான காரியங்கள் அனைத்தும் 2018-ம் ஆண்டின் ஜுலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய மாத ‘ஆரோனின் துளிர்த்த கோல்’ இதழ்களில் ‘வேதாகமத்தைப் புரிந்து கொள்வது எப்படி?’ என்ற கட்டுரையில் இஸ்ரவேலரது விழாக்கள் என்ற தலைப்பின் கீழ் விளக்கப்பட்டுள்ளதை படித்து அறியும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சங்காரத் தூதன் இரத்தம் பூசப்பட்ட நிலைகளுள்ள வீடுகளைத் தவிர மற்ற வீடுகளின் முதற்பேறான அனைத்தையும் சங்காரம் பண்ணினான். எகிப்தில் பெரும் அழுகுரல் கேட்டது. பார்வோன் “நீங்கள் கேட்டுக் கொண்டபடியே போய்விடுங்கள். எனக்கும் ஆசி கூறுங்கள்” என வேண்டினான். ஆண்டவர் ஆபிரகாமுக்கு தரிசனத்தில் சொன்னபடி (ஆதி. 15:13) 430-ம் ஆண்டு முடிவு பெற்ற அந்த நாளில் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வெளியேறினர். கர்த்தர் முன்பு மோசேக்கு சொன்னபடி (3:21, 22) எகிப்தியரிடமிருந்து பொன், வெள்ளி அணிகலன்களையும், துணிமணிகளையும் இஸ்ரவேலர் வாங்கினர். மக்கள் யோசேப்புக்கு ஆணையிட்டபடி அவரது எலும்பு -களையும் எடுத்துச் செல்ல மறக்கவில்லை. விடுதலைப் பயணம் சுமார் கி.மு. 1445-ல் ஆபீப் என்ற முதல் மாதம் 15-ம் தேதி துவங்கியது. பயணம் செய்த ஆடவர் மட்டும் ஆறு லட்சம் என வேதம் குறிப்படுகிறது. பெண்டிர், பிள்ளைகள் அனைவரையும் சேர்த்தால் சுமார் 25 லட்சம் ஜனங்கள் பயணித்தனர் என மதிப்பிடலாம். எபிரேயர் போன்று பிற இன அடிமைகளும் இப்பயணத்தில் இணைந்திருந்தனர் என யாத். 12:37-ல் பார்க்கிறோம்.

அடிமை நிலையிலிருந்து விடுதலையை நோக்கிச் செல்லும் பயணம் எளிதல்ல என இந்த வாதைகள் நமக்களிக்கும் செய்தியாகும். இந்த வாதைகள் உண்மையாக நிகழ்ந்தவையா? இவை இறைவன் அளித்த தண்டனையா? மன்னனின் மனக் கடினத்தால் ஏன் மக்கள் பாதிக்கப்பட வேண்டும்? என்ற கேள்வி பலருக்கும் எழலாம். கடவுளின் திட்டத்திற்கு எதிராக செயல்பட்டது எகிப்து நாடு. பரன் யார் என அறியவில்லை; பிறனை நேசிக்கவுமில்லை. யாவே தேவன் தான் சர்வ வல்லமை உள்ளவர் என அனைவரும் புரிந்து கொள்ளவும், இஸ்ரவேலரும் தங்களைத் தெரிந்து கொண்டவரின் பேறாற்றலையும், பேரன்பையும் அறிந்து அவர்மீது விசுவாசம் வைக்கவும் ஏதுவாக இவை நிகழ்ந்தன. பல சமயங்களில் இவை இயற்கையின் சீற்றத்தால், மாறுபாடுகளால் உண்டாயிருந்தாலும் இது கடவுளின் விரலே எனத் தெளியலாம்.

எகிப்து என்பது உலக ஆசை இச்சைகளைக் குறிக்கின்றது. இவைகளிலிருந்து விடுபட்டு விடுதலைப் பயணத்தை மேற்கொள்ள வேண்டுமெனில் இவ்வித கஷ்ட நஷ்டங்களை நாம் கடந்தே பயணத்தை துவக்க வேண்டியது அவசியம்.

## II. சீனாய் மலைக்கு தேவனின் அதிசய வழிநடத்துதல் : 13:17, 15:27

இஸ்ரவேலர் கோசேன் நாட்டில் – அதிலும் நல்ல நாடாகிய ராமசேஸ் நாட்டில் குடியிருந்தனர். இவை நைல் நதியின் மிகவும் வளமையான நீர் வளமும் நிலவளமுள்ள டெல்டா பகுதியில் அமைந்திருந்தன. செல்வச் செழிப்பின் மிகுதியால் ராமசேஸ், பித்தோம் என்ற பண்டசாலைப் பட்டணங்களை பார்வோன் இஸ்ரவேலரைக் கொண்டு உருவாக்கினான். வயல்களில் கீரை பாத்திகளில் மக்கள் தங்கள் காலால் நீரைப் பாய்ச்சினார்கள். இந்த கோசேன் மாநிலம் 900 சதுர மைல் பரப்பில் காணப்பட்டது. இப்பகுதியில் கர்த்தரது பாதுகாப்பு இருந்தது என்பதை இஸ்ரவேலருக்கு வாதைகளின் தொல்லை இல்லாதிருந்தலிருந்து அறியலாம். அடிமைகளாய் இருந்த போதிலும் தாங்கள் பல ஆண்டுகளாய் அனுபவித்த செழிப்பான இவ்விடத்தை விட்டு வெளியேற வேண்டியது அவசியமாகியது. இக்கூற்று பரம கானானை நோக்கி பயணம் செய்யும் நமக்கும் பொருந்தும்.

இஸ்ரவேலர் யுத்தத்தைக் கண்டால் மனமடிந்து போவார்கள் என்று பெலிஸ்தரின் நாடு வழியாய் போவது சமீபமானாலும் தேவன் அவர்களை சிவந்த சமுத்திரத்தின் வழியாய் சுற்றிப் போகச் செய்கிறார். பகலில் உலைக்களம் போலிருக்கும் வனாந்திர வழியில் மேகஸ்தம்பம்பத்திலும், தாங்கெண்ணா குளிர்மிகுந்த இரவில் அவர்களுக்கு வெப்பத்தையும் வெளிச்சத்தையும் கொடுக்க அக்கினி ஸ்தம்பத்திலும் குடை போல் பாதுகாத்து வழி நடத்துகிறார்.


ஜனங்கள் ராமசேஸிலிருந்து சுக்கோத், ஏத்தாம் ஆகிய இடங்களில் பாளையமிறங்கி பின் பாகால் செபோனுக்கு எதிரே ஈரோத் பள்ளத்தாக்கில் பாளையமிறங்கினார்கள். அவர்களுக்கு முன் செங்கடல், இருமருங்கிலும் செங்குத்துச் சரிவான மலைப்பகுதி. இந்நிலையில் வனாந்தரம் அவர்களை அடைத்துப் போட்டது என பார்வோன் தன் சேனைகளோடு புறப்படுகிறான். நெருக்கடியான இச்சூழலில் இஸ்ரவேலர் தங்களை வழிநடத்திய அற்புத தேவனை மறந்து, பயந்து, முறுமுறுத்து மோசேயிடம் வாக்குவாதம் செய்கின்றனர். இதையெல்லாம் நினைத்தவராய்த் தான் இயேசு கிறிஸ்து மனுஷகுமாரன் வரும் போது விசுவாசத்தைக் காண்பரோ என்று சொன்னாரோ!

**Man's extremity is God's opportunity** என்பார்கள். தேவனின் அதீத ஆற்றலை நன்குணர்ந்த மோசேயின் வார்த்தை நம்மை இன்றும் விசுவாசத்தில் பலப்படுத்திக் கொண்டே இருப்பது அதிசயம் (14:13,14) பார்வோன் குதிரைவீரரோடும், சேனைகளோடும் இஸ்ரவேலரைக் கிட்டிச் சேரும்படியும் அங்கே அவனையும் அனைத்து வீரர்களையும் இரதங்களையும் அழித்துப் போட ஒரு திட்டத்தை கர்த்தர் முன்பதாகவே வகுத்திருந்தார். இஸ்ரவேலருக்கு முன்பாக பயணித்து வழிகாட்டிய ஸ்தம்பம் இப்போது இடம் பெயர்ந்து இஸ்ரவேலருக்கு பின் வந்து இஸ்ரவேலருக்கு வெளிச்சத்தையும் எகிப்தியருக்கு இருளையும் கொடுத்த அற்புதம் தான் என்னே! (14:19,20) எகிப்தில் இது தேவனது விரல் என மந்திரவாதிகள் பார்வோனை எச்சரித்தனர்; பார்வோனின் ஊழியக்காரர் எகிப்து அழிந்து போனதை அறியவில்லையா என கண்டித்தனர். தலைமகனையும் பறி கொடுத்த பின்பும் கர்த்தருக்கு எதிராக எழும்பி செங்கடலில் ஜலசமாதியாகிறான், பார்வோன்.

செங்கடலை வெட்டாந்தரையைக் கடப்பது போல நடந்து சென்ற இஸ்ரவேலர் அக்கரையில் மகிழ்ச்சியில் திளைத்தனர். மோசே தேவனைப் போற்றிப் பாடுகிறார். பெண்களும் மிரியாமின் தலைமையில் தம்புரை எடுத்திசைத்து பாடி நடனமாடினர்.



# I. READ AND RECOGNISE : 42




Read and Recognise, வேதாகமப் புதிர், வேதவினா குறுக்கெழுத்துப் போட்டிகளில் அனைவரும் பங்கு பெறலாம். **25.09.2020**க்குள் விடை அனுப்பப்பட வேண்டும். குலுக்கல் முறையில் பரிசுகள் உண்டு.

பதில் அனுப்பப்பட வேண்டிய முகவரி :
திருமதி. **ஷர்லி காலின்ஸ்**
120/4, சீயோன் ஆலய வளாகம்,
திருச்சி – 620 008.

**97914 09192** என்ற அலைபேசி எண்ணுக்கு கருப்பு மையில் பதிலையும் பெயரையும் தெளிவாக மத்தியில் எழுதி Whatsapp மூலம் அனுப்பலாம்.

## Guidelines :

a. Bible Portion : John 7 & 8 Chapters

b. All answers begin with the letter "C"

c. Letters can be used any number of times.

d. Give the reference.

**Questions :**

1. Which one of you .................... me of sin?
2. Teacher, this woman has been ............ in the act of adultery.
3. My time has not yet .................
4. Truly, truly, I say to you, everyone who ........... sin is a slave.
5. Moses gave you .................................
6. .................. it be that the authorities really know that this is the ....................?
7. Neither do I ................. you.
8. The ............................. answered, "You have a demon"
9. As they ...................... to ask him, he stood up.
10. If you were Abraham's .................... you would be doing the works Abraham did.

## Answers : I. Read and Recognise : 41 (John 5 & 6)

| | | |
|---|---|---|
| **1. this, the, tombs 5:28** | **5. Take 5:11** | **8. the, the, Tiberias 6:1** |
| **2. these, things, taught 6:59** | **6. the, twelve 6:67** | **9. told, that, the 6:44** |
| **3. Truly, truly, the 6:53** | **7. the temple 5:14** | **10. that, the, testimony , true 5:32** |
| **4. to, that, these 6:5** | | |